செய்தி வெளியீடு எண் :14 நாள் :05.05.2020

**பத்திரிக்கைச் செய்தி**

கொரோனா வைரஸ் COVID -19 நோய் தொற்று தடுப்பு நடவடிக்கையில் தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அதனடிப்படையில், மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக செயல்பட்டு வரும் 24X7 அவசர கால உதவி எண்ணான **1800 425 0111** -ஐ தொடர்பு கொண்டு மருந்து பொருட்கள் தேவைப்படும் கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்காக உதவிட கூடுதலாக **ஒரு மாற்றுத்திறனாளிக்கு** தமிழக அரசின் சார்பில் விலையில்லாமல் **ரூ.1800/- வரை** மருந்து பொருட்கள் பெற்று வழங்கப்படவுள்ளது.

அதன்படி, மருந்து பொருட்கள் வேண்டும் மாற்றுத்திறனாளிகள் தங்களுக்கு வேண்டிய மருந்திற்கான மருத்துவரின் சீட்டு (Prescription), மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை, மருந்து இரசீது ஆகியவற்றுடன் **1800 425 0111** என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் பதிவு செய்து பயன் பெறலாம்.

இத்திட்டத்தினை கொரோனா ஊரடங்கு சமயத்தில் தேனி மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**